# இத்தாவும் அதன் சடங்குகளும். (01)

திருமண பந்தத்தில் தன் கணவனுடன் இணையும் ஒரு பெண் தலாக் என்ற தற்காலிகப்பிரிவின் மூலமோ அல்லது மரணம் என்ற நிரப்பந்த பிரிவின் மூலமோ அவரை பிரிந்ததன் பின்னர் அனுஷ்டிக்கும் ஒரு வழிபாடே இத்தாவாகும்.

இத்தா என்ற அறபுச்சொல் "கணக்கிடுதல்" என்ற தமிழில் பதத்தினைக்குறிக்கும்.

## தன் கணவன் மரணித்த ஒரு பெண்ணின் இத்தா (அல் இஹ்தாத்)

அல் "இஹ்தாத்" என்ற அறபுச் சொல் மொழி ரீதியாக "தடுத்தல்" என்ற கருத்தையும், மார்க்க ரீதியாக "கணவன் மரணித்த ஒர பெண் தன் துக்கததை வெளிப்படுத்தும் முகமாக தன்னை விட்டும் அலங்காரங்களை தடுத்துக் கொள்ளல்" என்ற கருத்தையும் கொடுக்கும்.

## ஏன் இந்த இஹ்தாத்?

ஒவ்வொரு மனிதனும் தன் சந்தோஷங்களை வெளிப்படுத்துவதற்கென சில சடங்குகளை ஏற்படுத்திக் கொடுத்த இஸ்லாம் இது போன்ற சில சடங்குகளை அவன் தன் துக்கங்களை வெளிப்படுத்தவும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

திருமண பந்தம் எந்தவொரு இரத்த தொடர்புகளோ, இனத் தொடர்புகளோ, மானிலத் தொடர்புகளோ இல்லாமல் இறைவன் உருவாக்கும் அன்பை மாத்திரம் அடித்தளமாக வைத்து நடாத்தப்படுகின்றது. இவ்வாழ்வில் தன் வாழ்க்கைத் துணையை இழப்பதால் ஆண்களை விட பெண்களே மிகப் பாதிப்புக்குள்ளாகின்றானர். ஏனெனில் அவளின் குழந்தைகள், உறைவிடம் உட்பட அனைத்து விடயங்களும் தன் கணவனிலே தங்கி நிற்கின்றது.

ஒரு பெண் தன் கணவனின் மரணச் செய்தியைக் கேட்டு மயக்கமடைகிறாள், மனநோயாளியாகிறாள், ஏன் மாரடைப்பால் மரணித்துக் கூடப்போகிறாள்.

இதனால்தான் தன் உறவினரை இழந்த ஒரு சாதாரண பெண் 3 நாட்கள் மாத்திரம் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற இறைவன், கணவனை இழந்த பெண் மாத்திரம் 4 மாதங்களும் 10 நாட்களும் துக்க அனுஷ்டானத்தில் ஈடுபடுவாள் என்று கூறியுள்ளான்.

## ஜாஹிலியாவில் துக்க அனுஷ்டானம்.

மனிதாபிமானத்திற்கு இடமே இல்லாத அந்த அறியாமைக்காலத்தில் "கணவனை இழந்த பெண் இழிவான முறையில் நடாத்தப்பட்டாள். ஒரு பெண்ணின் கணவன் மரணித்துவிட்டால், அவள் ஒரு வருட காலம் கீழ்த்தரமான வீட்டிலே ஒதுக்கிவைக்கப்படுவாள். அக்கால கட்டத்தில் அவள் அசிங்கமான ஆடை அணிந்து வாசனை பூசாமல் அருவருப்பான தோற்றத்தில் காணப்படுவாள். எந்தளவுக்கென்றால், அவளின் தவணை முடிந்ததும் கழுதை, ஆடு பறவை போன்ற ஏதாவது ஒரு பிராணி அவளிடம் கொடுக்கப்பட்டு அவள் அதை தன் மேனியில் தேய்ப்பாள். அப்போது அவளிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தின் காரணமாக அவைகள் கூட வெறுத்தொதுங்கும். பின் அந்த அனுஷ்டானத்திலிருந்து நீக்குவதற்காக நாய் அவளைக் கடந்து செல்லும்போது விட்டையை எறிவாள் பின் தான் நாடியமுறைப்படி அலங்கரிப்பாள்" என்று புஹாரியிலே ஜைனப் (ரழி) அவர்களைத் தொட்டும் அக்காலத்துப் பெண்களின் நிலை விபரிக்கப்பட்டுள்ளது.

## இஸ்லாத்தின் ஆரம்பகட்ட துக்க அனுஷ்டானம்.

மரணப்படுக்கையில் இருக்கும் ஒரு மனிதன் தன் மரணத்தின் பின் இத்தாவில் இருக்கும் தன் மனைவியின் தங்குமிடம் மற்றும் செலவுகள் பற்றி தன் வாரிசுகளுக்கு மரணசாசனம் எழுத வேண்டும் என்ற சூரா பகராவின் 240ம் வசனத்தை இறைவன் சொத்துப்பங்கீட்டு வசனம் இறங்குவதற்கு முன் இறக்கினான்.

> "உங்களிலிருந்து எவரேனும் மனைவிகளை விட்டு இறப்பெய்தும் நிலையில் (இருப்பவர்கள்) தங்களது மனைவிகளுக்காக ஓராண்டுவரை செலவு கொடுத்து (வீட்டை விட்டு) வெளியேற்றாதிருக்க மரணசாசனம் கூறவும்...."

பின்னர் இறைவன் இந்தச்சட்டத்தை அஸ் சூறா பகராவின் 234ம் வசனத்தில்,

> "உங்களிலிருந்து எவரேனும் மனைவிகளை விட்டு இறந்து விட்டால் (அம்மனைவியர்களான அவர்கள்) தமக்காக 4 மாதமும் 10 நாட்களும் எதிர்பார்த்திருப்பார்கள்" எனக் கூறி மாற்றிவிட்டான்.

## இஹ்தாதின் கால எல்லை.

கணவனை இழந்த ஒரு பெண் 4 மாதமும் 10 நாட்களும் துக்க அனுஷ்டானத்தில் ஈடுபடுவாள் என மேலுள்ள வசனம் தெளிவுபடுத்துகிறது. இன்னும் அதனை தெளிவுபடுத்தும் முகமாக நபியவர்களைத் தொட்டும் உம்மு ஹபீபா (ரழி) அவர்கள் கூறும் ஹதீஸ் புஹாரியில் பதிவாகியுள்ளது.

"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிக்கும் ஒரு பெண் தன் கணவனுக்காக 4 மாதமும் 10 நாட்களும் துக்கமனுஷ்டிப்பதைத் தவிர வேறு எவருக்காகவும் 3 நாட்களுக்கு மேல் துக்கமனுஷ்டிப்பது அவளுக்கு அனுமதியாகாது"

இதேபோன்று ஒரு கற்பினிப்பெண் தன் குழந்தையைப் பெற்றெடுக்கும்போது அவரது இஹ்தாதின் காலமும் முடிவடைகிறது. ஸபீஆ அல் அஸ்லமியா தன் குழந்தையைப் பெற்றெடுத்ததும் அவள் திருமணம் செய்வதற்கு நபியவர்கள் அனுமதி கொடுத்த சம்பவம் இதற்கு சான்று பகிர்கிறது.

## இத்தாவில் நுழைதல்.

ஒரு பெண் தன் கணவன் மரணித்த அடுத்த கணமே இஹ்தாதில் இருப்பாள். அது திருமண ஒப்பந்தம் முடித்த அடுத்த வினாடியில் நேர்தாலும் சரியே. இதற்கு மாற்றமாக இன்றைய சமுதாயம் கால நேரம் பார்த்து அப்பெண்ணை இத்தாவில் அமர்த்தும் சடங்கை மேற்கொள்கிறது. இது இஸ்லாம் காட்டித்தராத, அன்னிய மதக்கலாசாரத்திற்கு ஒப்பான ஒன்றாகும். உண்மையிலே ஒரு மனிதன் தன் துக்கத்தை வெளிப்படுத்துவதற்கென நேரம் குறிப்பதென்பது சிந்தனைக்கு மாற்றமான ஒன்றாகும்.

தொடரும்..... (02)

- விகாயாபின்து நூறு முஹம்மட் அஷ்ஷரயியா –

சிறீலங்காமுஸ்லிம்